தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## விவசாயிகள் தற்போது மிளகாய் விதைத்து பயனடையலாம்

உணவு தயாரிப்பு மற்றும் மசாலா பொடிகளில் மிளகாய் முக்கிய நறுமணமூட்டும் பொருளாக உள்ளது. இந்திய வேளாண் அமைச்சகத்தின் மூன்றாம் முன் மதிப்பீட்டின் படி, 2014-15ஆம் ஆண்டில் மிளகாய் 7.44 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 14.53 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் எனக் கணிக்கப்பட்டது. 2014-15ஆம் ஆண்டில், இந்தியாவிலிருந்து 3.47 இலட்சம் டன்கள் மிளகாய் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது கடந்தாண்டு ஏற்றுமதியை விட 11 சதவீதம் கூடுதலாகும். தேசிய அளவில் மிதமாக குறைந்துள்ள மிளகாய் உற்பத்தி மற்றும் அதிகரித்துள்ள ஏற்றுமதியின் காரணமாக நடப்பாண்டில் மிளகாய் விலை அதிகரித்துள்ளது. பொதுவாக, புதிய மிளகாய் வரத்து இந்தியாவில் பிற மாநிலங்களிலிருந்து நவம்பர் முதல் மே வரை சந்தைக்கு வரும். 2013-14ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 41401 எக்டரிலிருந்து 11294 டன்கள் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2012-13ஆம் ஆண்டு உற்பத்தியை விட 38 சதவீதம் குறைவாகும். முண்டு மற்றும் சன்னம் ஆகியவை தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய மிளகாய் வகைகளாகும். சன்ன ரகம் மொத்த மிளகாய் உற்பத்தியில் 80 சதவீதம் பங்களிக்கிறது. மிளகாய் சாகுபடி செய்யும் முக்கிய மாவட்டங்களில் மிளகாய் விதைப்பு அக்டோபர் மாத மத்தியில் தொடங்கும்.

பருவ மழை மாற்றத்தினால் மத்தியபிரதேசத்தில் குறைந்துள்ள மிளகாய் உற்பத்தி மற்றும் நடப்பு பருவத்தில் ஆந்திரபிரதேசத்தில் எதிர்பார்க்கப்படும் மிதமான உற்பத்திக் குறைவு மற்றும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையில் உள்ள தேவை ஆகிய

காரணங்களினால் மிளகாய் நல்ல விலைக்கு விற்கும். தற்போது தூத்துக்குடி சந்தையில் சன்ன மிளகாய் வற்றல் கிலோவிற்கு ரூ.120 வரை விற்கப்படுகிறது.

விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 18 ஆண்டுகளாக தூத்துக்குடி சந்தையில் நிலவிய சன்ன மிளகாய் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் பிப்ரவரி – மார்ச், 2016ல் சன்ன மிளகாய் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.85-90 வரை இருக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய விலையின் அடிப்படையில், மிளகாய் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

**<u>மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611284

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்